# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2022

FWC

**பொதுச் சாதாரணப் பரீட்சை**
**Common General Test**

**Three Hours** | **Gr -12 (2023)** | **12** | **T**

**கவனிக்க :**

- 1 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

01) இலங்கையில் சக்திவளங்கள் பற்றிய 2021 மத்திய வங்கியறிக்கை பற்றிய பின்வரும் தகவல்களை கருதுக. (2020 தரவு)

A – நிலக்கரி மின்உற்பத்தி 36.6% ஆகும்

B – நீர்மின்உற்பத்தி 24.9% ஆகும்

C – புதுபிக்கதக்க 11.9% ஆகும்

மேலே தரப்பட்டவற்றில் சரியானவை

(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) B யும் C யும்
(4) A யும் B யும் C யும் (5) மூன்றும் பிழை

02) பெண்களுக்கான ICC உலககிண்ண கிரிக்கட் போட்டி 2022 இல் நடைபெற்றது. இதில் இறுதிபோட்டியில் பங்குபற்றிய இரு நாடுகளும் எவை?

(1) அவுஸ்ரேலியா, நியூசிலாந்து (2) அவுஸ்ரேலியா, இங்கிலாந்து
(3) அவுஸ்ரேலியா, இந்தியா (4) நியூசிலாந்து, இங்கிலாந்து
(5) நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள்

03) உணவு பாதுகாப்பு சுட்டெண் 2021 இன் படி உலகில் முதலிடத்தில் உள்ள நாடு எது?

(1) அயர்லாந்து (2) பின்லாந்து (3) நியூசிலாந்து
(4) பிரிட்டன் (5) அமெரிக்கா

04) சூடானில் 20 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற படுகொலை தொடர்பான போர்க்குற்ற விசாரணையை சர்வதேச நீதிமன்றம் ஆரம்பித்தது. இவ்விசாரணையுடன் சம்பந்தப்பட்டவர் யார்?

(1) சூடான் முன்னாள் அதிபர் (2) சூடான் முன்னாள் இராணுவத்தளபதி
(3) பழங்குடிகளின் தலைவர் (4) அரச ஆதரவு ஆயுதக்குழு தலைவர்
(5) சூழல் பாதுகாப்பு அமைச்சர்

05) இலங்கையில் 2022 ஏப்பிரல் 1 தொடங்கி ஏப்பிரல் 5 நிறுத்தப்பட்டது பின்வரும் விடயங்களில் எது?

(1) பாதுகாப்பு சட்டம் (2) ஊரடங்கு சட்டம் (3) அவசரகாலசட்டம்
(4) 20வது திருத்தம் (5) நிதியமைச்சர் மாற்றம்

06) 2022 ஆண்டுக்கான G – 20 உச்சிமாநாடு நடைபெறவுள்ள நாடு எது?

(1) இத்தாலி (2) சவுதிஅரேபியா (3) யப்பான்
(4) இந்தோனிசியா (5) ஜப்பான்

07) 94ஆவது ஒஸ்கார் விருது விழா 2022 இல் நடைபெற்றது இதில் சிறந்தபடமாக தெரியப்பட்ட படம் எது?

(1) கோடா (2) டியூன் (3) கிங் ரிச்சக்கு
(4) என்கான்டோ (5) டிரைவ்மைகார்

08) உக்ரேன் நாட்டின் தலைநகர் எது?

(1) கார்கேவ் (2) கியோவ் (3) சார்னிஹிவ்
(4) கெர்கன் (5) மாரிபோல்

09) மார்ச் 2022 இல் 132 பேருடன் விபத்துக்குள்ளாகி அனைவரும் இறந்த விமானவிபத்து நடைபெற்ற நாடு எது?

(1) ரஷ்யா (2) சீனா (3) இந்தோனிசியா
(4) மலேசியா (5) ஈக்குவோடோர்

10) கனடா நாட்டில் அண்மையில் செம்பி (Zombie) நோய்பற்றி பரவலாக கதைக்கப்படுகிறது. இந்நோய் எந்தவிலங்கை தாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

(1) புலி (2) யானை (3) சிங்கம்
(4) பறவைகள் (5) மான்

11) ஒரு தொழிற்சாலையில் ஒரே பொருளை உற்பத்திசெய்யும் A, B எனும் இரண்டு பொறிகள் உள்ளன. பொறி A ஆனது 32 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 6 மணித்தியாலங்களையும் பொறி B ஆனது 40 பொதிகளை உற்பத்தி செய்வதற்கு 5 மணித்தியாலங்களையும் எடுக்கிறது. இரண்டு பொறிகளும் ஒரே நேரத்தில் இயங்க ஆரம்பிக்குமாயின் 260 பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அப்பொறிகளுக்கு செலவாகும் நேரம் எவ்வளவு?

(1) 09 மணி 15 நிமிடம் (2) 19 மணி 15 நிமிடம் (3) 19 மணி 20 நிமிடம்
(4) 19 மணி 25 நிமிடம் (5) 19 மணி 30 நிமிடம்

12) இருவர் புகையிரதப் பாதையொன்றிற்கு சமாந்தரமான ஒரே திசையில் $3kmh^{-1}$, $4kmh^{-1}$ வேகங்களில் பயணித்துக்கொண்டிருந்தனர். அதே திசையில் பயணிக்கும் புகையிரத எஞ்சினானது இருவரையும் முறையே 6 செக்கனிலும் 9 செக்கனிலும் முற்றாகக் கடந்து சென்றது. இப்புகையிரத எஞ்சினின் நீளம் யாது?

(1) 05m (2) 10m (3) 15m (4)20m (5) 30 m

13) திரு. சில்வா ஒரே நாளில் ரூ 150000 பெற்ற பணத்தை A,B எனும் இரண்டு வங்கிகளில் முறையே 8%, 10% வருட எளிய வட்டி விகிதத்தின் கீழ் வைப்புச் செய்தார். இரண்டு வருடங்களின் பின்னர் அவரது இரண்டு வைப்புக்களுக்காகவும் மொத்தமாக ரூ 28500 இனை வட்டியாகப் பெற்றார். அவர் ஆரம்பத்தில் வங்கி B இல் வைப்புச் செய்த பணத்தொகை எவ்வளவு?

(1) ரூ 37500 (2) ரூ 75000 (3) ரூ 80000 (4) ரூ 100000 (5) ரூ 112500

14) திருமதி பெரேரா மொத்த விற்பனை நிலைமொன்றிலிருந்து ஓர் இறவுக்கை ரூபாய் 475 வீதம் 120 இறவுக்கைகளைக் கொள்வனவு செய்தார். அவற்றை அவரது களஞ்சியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ரூ 1200 செலவாகியது. மேலும் அயன் பண்ணுவதற்கு ஒரு இறவுக்கைக்கு ரூபா 30ம் செலவாகியது அத்தோடு அவற்றை பொதிசெய்வதற்கு ரூ 3000 இனைச் செலவிட நேர்ந்தது. இப்போது அவர் ஒவ்வொரு இறவுக்கையையும் 40% இலாபத்துடன் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார் எனின். ஒரு இறவுக்கையின் விற்பனை விலை எவ்வளவாக இருத்தல் வேண்டும்?

(1) ரூ 515 (2) ரூ 540 (3) ரூ 656 (4) ரூ 756 (5) ரூ 856

15) தாம் $50kmh^{-1}$ கதியில் செல்வதாயின், நண்பகல் 12.00 மணிக்கு X எனும் இடத்தை அடையாளம் எனவும் $75kmh^{-1}$ கதியில் செல்வதாயின் முற்பகல் 11.30 மணிக்கு அந்த இடத்தை அடையலாம் எனவும் பந்துல்ல தனது பயணத்தைத் தொடங்க முன்னர் அனுமானித்தார். அதற்கமைய அவர் முற்பகல் 10.55 மணிக்கு x எனும் இடத்தை சென்றடைந்தார். அவர் பயணம் செய்த சராசரிக்கதி எவ்வளவு?

(1) $170kmh^{-1}$ (2) $171kmh^{-1}$ (3) $172kmh^{-1}$ (4) $180kmh^{-1}$ (5) $184kmh^{-1}$

16) பானவகையொன்றை தயாரிப்பதற்கு A வகைச் சாறும் B வகைச்சாறும் முறையே 4 : 3 விகிதத்தில் பாத்திரமொன்றினுள் கலக்கப்பட்டன. அப்பாத்திரத்திலிருந்து. பருகுவதற்காக 14 லீற்றர் பானம் எடுக்கப்பட்ட பின்னர். A வகைச் சாறுக்கும் B வகைச் சாறுக்கும் இடையிலான விகிதம் 4 : 5 ஆகுமாறு B வகையைச் சேர்ந்த சாறு 14 லீற்றர் அப்பாத்திரத்தில் சேர்க்கப்பட்டது. பாத்திரத்தினுள் ஆரம்பத்தில் A வகைச்சாறு எத்தனை லீற்றர் பயன்படுத்தப்பட்டது?

(1) 12 லீற்றர் (2) 15 லீற்றர் (3) 18 லீற்றர் (4) 22 லீற்றர் (5) 36 லீற்றர்

17) அசித்த 45 மாணவர்கள் உள்ள அவனது வகுப்பில் கணித பாடச் சோதனையின் சராசரிப்புள்ளி 52 எனக் கணித்தான். எனினும் சராசரிப்புள்ளியைக் கணிப்பதற்காக அசித்த பயன்படுத்திய புள்ளிகளுக்கு இடையே 81, 72, 63 ஆகிய சரியான மூன்று புள்ளிகளுக்குப் பதிலாக முறையே 18, 07, 11 என தவறான மூன்று புள்ளிகள் பதிவு செய்யப்பட்டமையை ஆசிரியர் கண்டறிந்தார். இக்கணித சோதனையின் சரியான சராசரிப்புள்ளி எவ்வளவு?

(1) 54 (2) 55 (3) 56 (4) 57 (5) 59

18) நில அளவையாளர் ஒருவர் சதுரவடிவான காணித்துண்டொன்றின் ஒரு பக்க நீளத்தை அளக்கும் போது சரியான பெறுமானத்திலும் 5% கூடுதலாக அமையுமாறு வழுவுடன் கூடிய அளவீடொன்றைப் பெற்றார். பின்னர், அப்பெறுமானத்தைப் பயன்படுத்தி, அவர் சதுரக் காணித்துண்டின் பரப்பளவைக் கணித்தார். அப்பரப்பளவுக் கணித்தலின் சதவீத வழு எவ்வளவு?

(1) 1.025% (2) 10.25% (3) 11.25% (4) 12.25% (5) 16.25%

19) கடிகாரமொன்று நேரத்தை கூடுதலாகக் காட்டியவாறு சீரான வேகத்தில் இயங்குகிறது. அது காட்டும் நேரம் ஞாயிற்றுக்கிழமையொன்றில் முற்பகல் 11.00 மணிக்கு 3 நிமிட நேரம் பின்தங்கியிரந்ததோடு, அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 6.00 மணிக்கு 5 நிமிடம் 45 செக்கன் முன்சென்றிருந்தது. இக்காலப்பகுதியில் அக்கடிகாரம் சரியாக நேரத்தைக் காட்டியது எச்சந்தர்ப்பத்திலாகும்,

(1) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 (2) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 10.00
(3) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 11.00 (4) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 11.30
(5) புதன்கிழமை பிற்பகல் 11.00

20) நான்கு வருடங்களுக்கு முன்னர் திரு. பர்னாந்து, அவரது மனைவி, அவர்களது மகள் ஆகியோரின் சராசரி வயது 35 வருடங்களாக இருந்ததோடு, ஆறு வருடங்களின் முன்னர், திருமதி பர்னாந்து அவரது மகள் ஆகியோரின் சராசரி வயது 25 வருடங்களாக இருந்தது. திரு பர்ணந்துவின் தற்போதைய வயது என்ன?

(1) 55 வருடங்கள் (2) 50 வருடங்கள் (3) 45 வருடங்கள்
(4) 40 வருடங்கள் (5) 35 வருடங்கள்

21) வன்மை, பாயும் தன்மை, சூடு ஆகிய மூன்று இயல்புகளுள் மிகக் கூடுதலான இயல்புகளைக் கொண்ட பொருள் பின்வருவனவற்றுள் எது?


(1) எரிமலைக்குழம்பு (2) கொதிநீராவி (3) புகை
(4) சீமெந்து (5) தீ

22) அக்மல் ஐந்த வருடங்களுக்கு முன்னர் உருக்கு கூர்த்தலையையும் மரக்கைப்பிடியையும் கொண்ட கோடரி ஒன்றினைக் கொள்வனவு செய்தான். அவன் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை கூர்த்தலையையும் ஒவ்வொரு வருடங்களுக்கு ஒரு தடவை அதன் கைப்பிடியையும் மாற்றினான். முதன்முதலாக கோடரியைக் கொள்வனவு செய்த பின்னர், எத்தனை தடவைகள் புதிய கோடரியொன்றின் உரிமையாளராகும் பாக்கியத்தை அவன் அனுபவித்துள்ளான்.


(1) ஒரு தடவை (2) இரண்டு தடவைகள் (3) மூன்று தடவைகள்
(4) நான்கு தடவைகள் (5) ஒரு தடவையுமில்லை

23) ஒரு கிணற்றின் அடியில் வாழும் தவளையொன்றும் தேரையொன்றும் ஒரே கணத்தில் கிணற்றின் சுவரின் வழியே ஏறத்தொடங்குகின்றன. மீண்டும் ஒவ்வொரு நிமிட நேர இடைவெளியிலும் தவளை, அந்த நிமிடத்தின் ஆரம்பத்தில் கிணற்று விளிம்பிலிருந்து ஏறவேண்டிய மொத்த அளவில் சரிபாதியளவு மேலே ஏறுகிறது. தேரையும் அவ்வாறே மேலே ஏறுவதோடு நிமிடத்தில் கடந்து செல்லும் தூரம் கிணற்று விளிம்பிலிருந்து ஏற வேண்டிய மொத்த தூரத்தின் மூன்றிலொரு பகுதியாகும். பயணத்தை ஆரம்பித்த கணத்திலிருந்து இரண்டு நிமிட நேரம் கழித்த பின்னர் அவை இரண்டுக்கும் இடையிலான இடைவெளி 3.5m எனின் அக்கிணற்றின் ஆழம் எவ்வளவு?


(1) 17m (2) 18m (3) 34m (4) 36m (5) 48m

24) 

உருவில் காட்டப்பட்டுள்ள கடிகார முகப்பின் சரியான தளவாடி விம்பத்தைக் காட்டி நிற்கும் உரு பின்வருவனவற்றுள் எது?




(1)



(2)



(3)




(4)




(5)


25) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிலும் சதுரமுகியொன்றின் திறந்த முகப்புக்களில் உள்ள உருவங்கள் தரப்பட்டுள்ளன.



மேற்படி சதுரமுகியை அமைப்பதற்கு பின்வரும் எந்த மாதிரியுருவைப் பயன்படுத்தலாம்?




- *26, 27* ஆகிய வினாக்கள் ஐந்த வருட காலத்தினுள் முறையே ஒவ்வொரு வருடத்தினதும் A, B, C, D, E ஆகிய ஐந்து கம்பனிகளின் விற்பனை அளவுகளைக் காட்டும் பின்வரும் வரைபினை அடிப்படையாகக் கொண்டவை




26) இக்காலப் பகுதியில் மிகக்கூடிய விற்பனை வளர்ச்சி வேகத்தைக் கொண்ட கம்பனி எது?

(1) A (2) B (3) C (4) D (5) E

27) இக்காலப்பகுதியில் விற்பனையில் மிகக் கூடுதலான உறுதிப்பாட்டைக் காட்டும் கம்பனி எது?

(1) A 2) B (3) C (4) D (5) E

- *28, 29* ஆகிய ஒவ்வொரு வினாவின் கீழும் தரப்பட்டுள்ள நான்கு கூற்றுக்களையும் (A) உறுதியாக நிகழ்கின்ற (B) நிகழக்கூடிய (C) நிகழும் வாய்ப்புக் குறைவான (D) ஒருபோதும் நிகழாத என வகைப்படுத்தவேண்டியுள்ளது.

28) 1. 14 பேரைக் கொண்ட ஒரு குழுவில் ஒரே மாதத்தில் பிறந்த முவர் உள்ளனர்

2. எந்த மூன்று நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கும்

3. கோடாத நாணய குற்றியினை 100 தடவைகள் மேலே சுண்டிய போது 99 தடவைகள் கிடைத்த பெறுபேறு தலை ஆகும்.

4. $x^2 = 4$ ஆகும் போது $x = \pm 2$ ஆகும்.

மேற்படி நான்கு கூற்றுக்களையும் ஒழுங்குமுறைப்படி வகைப்படுத்தினால் கிடைப்பது

(1) C, D, D, A ஆகும் (2) B, B, D, A ஆகும் (3) B, A, D, B ஆகும்

(4) A, D, C, B ஆகும் (5) A, B, D, A ஆகும்

29) 1. தமது பிள்ளைகள் ஆறுபேரும் பெண்பிள்ளைகளாகக் கொண்ட ஒரு தாய் மேலுமொரு பெண்பிள்ளையைப் பெற்றெடுக்கிறார்.

2. எந்த மூன்று நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்குமாயின் அப்போது எந்த நான்கு நேர்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கும்.

3. கோடாத நாணயக் குற்றியினை 10 தடவைகள் மேலே சுண்டிய போது 5 தடவைகள் கிடைத்த பெறுபேறு தலை ஆகும்.

4. எல்லாப் பறவைகளுக்கும் பறக்க முடியும்

மேற்படி நான்கு கூற்றுக்களையும் ஒழுங்குமுறைப்படி வகைப்படுத்தினால் கிடைப்பது

(1) B, A, A, B (2) B, A, B, D (3) C, B, B, C

(4) C, B, C, D (5) C, D, A, B

- **30 தொடக்கம் 32 வரையிலான வினாக்கள் பின்வரும் தகவ்களை அடிப்படையாகக் கொண்டவை**

பாடசாலைத் தோட்டத்தில் பழமரங்களுக்குத் தடியால் அடித்து ஏழு மாம்பழங்களையும், ஐந்து தோடம்பழங்களையும் நிலத்தில் வீழ்த்திய குற்றத்துக்காக ஐந்து மாணவர்களை அழைத்து அவ்வொவ்வொரு மாணவரும் பறித்த பழங்களின் எண்ணிக்கை குறித்து வினாவிய போது அவர்கள் வழங்கிய பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அமல் - ஒரு மாம்பழமும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்
பவன் - இரண்டு மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்
காசிம் - இரண்டு மாம்பழங்களம் மாத்திரம்
டேவிட் - ஒரு மாம்பழமும் இரண்டு தோடம்பழங்களும் மாத்திரம்
எமில் - ஒரு தோடம்பழம் மாத்திரம்

30) ஒருவர் மாத்திரம் பொய் சொல்கிறார் எனின், அவர் உண்மையில் இரண்டு மாம்பழமும் இரண்டு தோடம்பழமும் மாத்திரம் பறித்தார் எனின், அவர் யாராக இருக்க முடியும்?

(1) அமல் (2) பவன் (3) காசிம் (4) டேவிட் (5) எமில்

31) ஒருவர் மாத்திரம் பொய் சொல்கிறார் எனின், அவர் உண்மையில் மூன்று மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம் பறித்துள்ளார் எனின், அவர் யாராக இருக்க முடியும்?

(1) அமல் (2) பவன் (3) காசிம் (4) டேவிட் (5) எமில்

32) உண்மை சொல்லுவோரினால் பறிக்கப்பட்ட மாழ்பழங்களின் எண்ணிக்கை நான்கும், பொய் சொல்வோரினால் பறிக்கப்பட்ட தோடம்பழங்களின் எண்ணிக்கை இரண்டும் எனின், உண்மையில் எமில் பறித்தவை யாவை?

(1) இரண்டு மாம்பழங்கள் மாத்திரம்

(2) ஒரு தோடம்பழம் மாத்திரம்

(3) ஒரு மாம்பழமும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்

(4) ஒரு மாம்பழமும் இரண்டு தோடம்பழங்களும் மாத்திரம்

(5) மூன்று மாம்பழங்களும் ஒரு தோடம்பழமும் மாத்திரம்

- ***33 தொடக்கம் 35 வரையிலான வினாக்கள் பீகிப்து, சீகிப்து எனும் புனையப்பட்ட இரண்டு*** இராசதானிகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள் ஓர் இராசதானியில் அடி *2* இல் எண்கள் எழுதப்பட்டுள்ளதோடு மற்றைய இராசதானியில் அடி *3* இல் எண்கள் எழுதப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கேயுரிய எண் குறியீட்டுத் தொகுதியொன்றையும் பயன்படுத்தினர். பீகிப்து மக்கள் ~ @ ~ என எழுதிய எண்ணை சீகிப்து மக்கள் &# என எழுதினர்.

*33)* பீகிப்து மக்கள் ~~~@ என எழுதிய எண்ணை சீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்?

(1) &&# (2) #&& (3) $$& (4) ### (5) &&&

*34)* சீகிப்து மக்கள் # # # என எழுதிய எண்ணை பீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்

(1) ~@@~ (2) ~@@-@ (3) @~~ (4) ~@@@ (5) ~@~@

*35)* சீகிப்து மக்கள் &$ என எழுதிய எண்ணை பீகிப்து மக்கள் எவ்வாறு எழுதினர்

(1) ~~ (2) ~~@ (3) $~~ (4) ~@* (5) ~@~

- ***36 தொடக்கம் 38 வரையிலான வினாக்கள் கடையொன்றிலே விலைகளை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இரகசிய குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டவை.***
  - இங்கே விலைகளினால் குறிப்பதற்கான ஒவ்வொரு எண்ணிற்காகவும் ஒரு ஆங்கில எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.
  - அதற்கேற்ப அந்த இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட ஆறு எண்களும் அவற்றிற்குரிய ஆங்கில சொற்றொடர் ஆறும் கீழே தரப்பட்டுள்ளன.
  - எனினும் ஒவ்வொரு எண்ணின் எதிரிரேயும் காட்டப்பட்டிருப்பது அதற்கு உரிய சொற்றொடர் அல்ல. அவை மாற்றி எழுதப்பட்டுள்ளன.

| எண்கள் | இரகசிய குறியீடு (ஒழுங்கு முறையில் இல்லை) |
|---|---|
| 328015 | FJAGDE |
| 475690 | KKACJG |
| 240879 | CBFJLE |
| 563210 | DCLAFG |
| 149352 | AGKEDF |
| 883462 | GCEKBL |

மேற்படி தரவுகளை அவதானித்து கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

*36)* K என்ற எழுத்தினால் காட்டப்படும் இலக்கம் யாது?

(1) 1 (2) 3 (3) 5 (4) 8 (5) 9


*37)* *2* என்ற இலக்கத்திற்காக பயன்படுத்தப்படும் இரகசிய எழுத்து யாது?

(1) A (2) G (3) F (4) L (5) S

38) 2460 ரூபாய் என்பதைக் குறிப்பிட பயன்படுத்தும் இரகசிய சொற்றொடர் யாது?

(1) AJKF (2) BDEL (3) GCJE (4) GCBL (5) ADJL

- *39 தொடக்கம் 42 வரையுள்ள வினாக்கள் பக்கமொன்றின் நீளம் 12 சென்ரிமீற்றரான சதுரமுகி அமையுமாறு ஒன்று சேர்க்கப்பட்ட நீளத்தில் சமனானதும் அகலத்தில் வேறுபட்டதுமான சில மரத்துண்டுகள் உள்ளடக்கப்பட கீழேயுள்ள உருவை அடிப்படையாகக் கொண்டது.*




அதற்கேற்ப ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து. அதற்குரிய விடைக்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

39) இங்கு சேர்க்கப்பட்டுள்ள மரத்துண்டகளின் எண்ணிக்கை எவ்வளவு?

*(1) 6 (2) 8 (3) 9 (4) 10 (5) 3*

40) இந்த சகல மரத்துண்டுகளையும் நீட்டி ஒரே நீளமாக அமைத்தால் வரிசையின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்களாகும்?

*(1) 120 (2) 110 (3) 108 (4) 96 (5) 80*

41) இந்த சகல மரத்துண்டுகளையும் கொண்டு ஒரே மட்டத்திலே செவ்வகமுகி வடிவின் மேற்பரப்பு கிடைக்குமாறு ஒன்றிற்கொன்று தொடுகையுறுமாறு நிலத்தின் மீது வைக்கப்பட்டது எனின் அந்த மேற்பரப்பினது பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்களாகும்?


(1) 332 (2) 432 (3) 532 (4) 632 (5) 864

42) இங்கு B என்ற எழுத்தினால் காட்டப்படும் மரத்துண்டுடன் தொடுகையுறும் மரத்துண்டுகளின் எண்ணிக்கை என்ன?

*(1) 5 (2) 7 (3) 8 (4) எல்லாம் (5)*

43) ஒரு குடும்பத்தின் இராப்போசனத்தில் மீன், கோழி இறைச்சி ஆகிய இரண்டு வகைகளும் அடங்கியுள்ளன. குடும்பத்தின் சில உறுப்பினர்கள் மீன் மாத்திரம் உண்டதோடு. சிலர் கோழி இறைச்சி மாத்திரம் உண்டனர். குடும்பத்தில் சில உறுப்பினர்கள் காய்கறிகள் மாத்திரம் உண்பவர்களாவர். அவர்கள் மீனோ கோழி இறைச்சியோ உண்ணவில்லை குடும்பத்தில் ஏனைய

உறுப்பினர்கள் மீன், கோழியிறைச்சி ஆகிய இரண்டு வகைகளையும் உண்டனர். மேற்படி நிலைமையை பின்வரும் எவ்வரிப்படம் மிகவும் தர்க்க ரீதியாக விவரிக்கின்றது?



(1) (2) (3) (4) (5)

- **44, 45 ஆகிய வினாக்கள் பின்வரும் பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டவை.**

**பொது மக்களுக்கான ஓர் அறிவித்தல்**

நுகர்வோருக்கு வழங்கப்படும் விநியோகங்கள். சேவைகளின் தரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் மின்சார சபை, பட்டியற் படுத்தப்பட்ட பிரசேங்களில் புனரமைப்பு, பராமரிப்புக் கருமங்களில் ஈடுபடுகின்றது. அதன் விளைவாக அப்பிரதேசங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட இடமுண்டு. சேவை துண்டிப்புகளின் விளைவாக மின்சார நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து கவலை தெிவிக்கப்படுகின்றது. இயன்றளவு விரைவாக மின்சார விநியோகாத்தை இயல்பு நிலைக்குட்படுத்துவதற்கு மின்சார சபை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

44) இந்த அறிவித்தலின் மூலம் நுகர்வோருக்கு வழங்கப்படும் முக்கிய தகவல் யாது?
(1) மின்விநியோகத்தில் தடங்கல் ஏற்படுகின்றமை
(2) விநியோகங்கள், சேவைகளின் தரத்தை விருத்தி செய்தல்
(3) புனரமைப்பு, பராமரிப்புக் கருமங்கள்
(4) தவிர்க்க முடியாத தடங்கல் குறித்துக் கவலை தெரிவிப்பு
(5) மின்சார விநியோகத்தை வழமை நிலைக்கு மாற்றுவதைத் துரிதப்படுத்துதல்

45) குறித்த பிரதேசங்களில் மின்விநியோகத்தில் தடங்கல் ஏற்படுவதற்கு காரணமாக அமையத்தக்கது.
(1) புனரமைப்பு, பராமரிப்புக் கருமங்கள்
(2) தற்போதைய விநியோகங்கள் குறைந்த தரத்தைக் கொண்டிருத்தல்
(3) மின்சார விநியோகம் தடைப்படல்
(4) நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்கள்
(5) மின் விநியோகத்தை இயல்புநிலைப்படுத்தல்

- **46, 47 ஆகிய வினாக்களில் 1, 7 ஆகிய வாக்கியங்களுக்கு இடையே உள்ள A,B,C,D,E ஆகிய வாக்கியங்கள் சரியான ஒழுங்குமுறைப்படி தரப்படவில்லை. ஏழு வாக்கியங்களையும் தர்க்கரீதியாக ஒழுங்குபடுத்தினால் அந்த வாக்கியங்களின் சரியான ஒழுங்கைத் தெரிவு செய்க.**

46) 1 – உங்களது மின்னஞ்சலை வாசிக்கக் கிடைத்தமை குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.
A – எப்படி உங்களது பரீட்சை? நன்றாகச் செய்தீர்களா?
B – பெறுபேறு கிடைத்த பின்பு தயவுசெய்து எங்களைப் பார்க்க வாருங்கள்
C – நீங்கள் ஒரு மாதமாக எனக்கு மின்னஞ்சல்கள் அனுப்பவில்லை
D – நீங்கள் பரீட்சைக்காகப் படிக்கின்றமையை நான் அறிந்திருந்தேன்
E – நீங்கள் பரீட்சையில் உயரிய சித்தி பெறுவீர்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.
7 – நீங்கள் எங்களைப் பார்க்க வரும்போது உங்களது கிற்றாரையும் தவறாது கொண்டு வாருங்கள்
(1) ACBDE (2) CDABE (3) CDAEB (4) CDEAB (5) DCAEB

47) 1 – திருமதி, சீலா அவரது ஊரில் மட்பாண்டக் கைத்தொழிலொன்றை ஆரம்பித்தார்.

A – அவரின் கீழ் இப்பொழுது 10 பெண்கள் வேலை செய்கின்றார்கள்.

B– மேலதிக பெண்களை பணியில் அமர்த்துவதற்காக அவர் பல இடங்களில் அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்தினார்.

C – உற்பத்திச் செயன்முறை இப்பொழுது இரண்டு சேவை மாற்றுக்களின் கீழ் நடைபெறுகின்றது.


D - அவர் தொடக்கத்தில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்பைப் பெற்றார்.

E – துலங்கல்கள் மிக சாதகமானவையாக இருந்தன.

7 – திருமதி. சீல முயற்சியுடைமைக்கு உண்மையான ஓர் எடுத்துக்காட்டாவார்

(1) BDAEC (2) BDEAC (3) DBAEC (4) DBEAC (5) DEBAC

48) கீழே விபரிக்கப்படும் நிகழ்வுகளைக் காட்டுவதற்கு ஆறு படங்கள் வரையப்பட்டுள்ளன.
ஆண் பிள்ளையொருவர் பேருந்து தரிப்பிடத்துக்கு விரைவாக வந்தபோதிலும் அவருக்கு இரண்டு பேருந்துகளிலும் ஏறிக்கொள்ள முடியாமை காரணமாக தனது பணத்தை முச்சக்கரவண்டியொன்றில் பயணித்தல்




கீழே காட்டப்பட்ட எந்த ஒழுங்குமுறைப்படி படங்கள் சரியான விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன?

(1) DACEFB (2) DAECFB (3) DAFCEB (4) DEACFB (5) DEAFCB

- **49, 50 ஆகிய வினாக்கள் பின்வரும் உரையாடல் பகுதியை அடிப்படையாகக் கொண்டவை.**
இல் உரையாடல் தனது மகனின் சான்றிதழ் பிரதியொன்றினைப் பெறுவதற்காக பரீட்சை திணைக்களத்துக்கு வந்த ஒரு பெண்ணிற்கும் விசாரணைக் கருமபீடத்தில் இருந்த வரவேற்பாளராகிய பெண் உத்தியோகத்தருக்கும் இடையே இடம்பெற்றது. பெண்மணியின் காலை வணக்கத்துடன் உரையாடல் ஆரம்பித்ததுடன் அவரது நன்றி தெரிவிப்புடன் அது முடிவடைந்தது.

உரையாடலின் ஏனைய பகுதிகள் ஒன்றுடனொன்று கலந்திருப்பதுடன் A, B, C, D, E, F, G, H, I, J, K ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன.

- காலை வணக்கம் மிஸ்!

A- சான்றிதழை இலங்கையிலா அல்லது வெளிநாட்டிலா பயன்படுத்த எதிர்பார்க்கின்றீர்கள்?

B- ஆம், வெளிநாடொன்றில் எனது மகன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பு பாடநெறியொன்றுக்காக விண்ணப்பிக்க எதிர்பார்க்கிறார். எனவே அது ஆங்கிலமொழியில் தேவைப்படுகின்றது.

C- ஆம், என்னிடம் இருக்கிறது. ஆனால் நான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் அதனை எப்படி உறுதிசெய்துகொள்வது?

D- எமது திணைக்களம் சான்றிதழை நாளை காலையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பும். உங்களுக்கு அதனை நாளை பகல் 12.00 மணிக்குப் பின்னர் வெளிநாட்டு அலுவலர்கள் அமைச்சின் கொன்சியுலர் பிரிவினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

E- சான்றிதழ் ஆங்கில மொழியில் உள்ளது. அதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

F- நான் அதனை எவ்வாறு செய்துகொள்வது?

G- அது உங்களுடையதா?

H- இல்லை, அது எனது மகனுடையது.

I- வணக்கம் அம்மா, என்னிடம் என்ன உதவியை எதிர்பார்க்கின்றீர்கள்?

J- ஆமாம், உயர்தர சான்றிதழ் ஒன்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது என எனக்குத் தெளிவாக சொல்வீர்களா?

K- இதோ விண்ணப்பப்பத்திரம். இதனை சரியாகப் பூரணப்படுத்தி இந்த கட்டடத்தின் தரைத்தளத்தில் உள்ள இல.01 கருமபீடத்தில் ஒப்படையுங்கள். அங்கு இருக்கும் உத்தியோகத்தர் உங்களுக்கு உதவி செய்வார். உங்களிடம் பரீட்சை ஆண்டு, சுட்டிலக்கம் போன்ற தேவையான தகவல்கள் உள்ளனவா?

- நல்லது. மிஸ் நீங்கள் முழு வேலையையும் நன்றாக விளக்கினீர்கள் மிக்க நன்றி

49) இப்பெண்மணியினால் அவரது வாழ்த்து தெரிவிப்பு, நன்றி தெரிவிப்பு ஆகியவற்றுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட உரையாடற் பகுதிகள் யாவை?

(1) ABDFH (2) ACEGJ (3) BCEFG

(4) BCEFH (5) BCFHJ

50) மேற்படி உரையாடலின் மிகத் தர்க்கரீதியான ஒழுங்குமுறை பின்வருவனவற்றில் எது?

(1) GHFKADCBEIJ (2) GHFKCDABEIJ (3) IFDCKJGHABE

(4) IFGHJABCDEK (5) IJGHABEFKCD

✱-✱-✱